



அபுதாபி, துபை, ஷார்ஜா மற்றும் ஏனைய ஐக்கிய அரபு அமிரக பள்ளிவாசல்களில்
வெள்ளிக்கிழமை ஓதப்படும் ஜும்ஆ உரை

| | |
|---|---|
| வெளியிடு | ஐக்கிய அரபு அமிரக அரசின்<br>இஸ்லாமிய விவகார துறை<br>(http://www.awqaf.gov.ae) |

வெள்ளிக்கிழமை ரபியுல் அவ்வல் பிறை 21 ஹிஜ்ரி 1437
Friday of Rabiyul Awwal 21st Hijri 1437
1st January 2016

| | |
|---|---|
| தலைப்பு: | வாசிக்கும் பழக்கம் அறிவு ஞானத்தின் திறவுகோல்! |


| | |
|---|---|
| தமிழில் | மௌலவி, அப்சலுள் உலமா<br>புளியங்குடி செய்யிது அபூஸாலிஹ் பிலாலி B.Com., DUBAI.<br>Contact No. +971529919346 & Email : abusalih100@gmail.com |


*இந்த உரையை ஒலி-ஒளி வடிவில் கேட்க +971 52 9919346 என்ற எண்ணிற்கு வாட்ஸ்அப்( ) மெசேஜ் அனுப்பவும். குருப்பில் சேர விரும்பாதவர்களுக்கு தனித்தனியாக அனுப்பப்படும்.*

| தலைப்பு: | வாசிக்கும் பழக்கம் அறிவு ஞானத்தின் திறவுகோல்! |
|---|---|

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! அவன்தான் அகிலத்தார் யாவரையும் படைத்து வளர்த்து தகுந்த முறையில் பக்குவப்படுத்துகிறான். வாசிக்க வேண்டும் என்று தன்னுடைய நபிக்கு இறைவன் கட்டளையிட்டுள்ளான். வாழ்வில் ஏற்றம் பெறுவதற்கும், அழகிய பண்பாடுகளை பெறுவதற்கும் புத்தக வாசிப்பு பெருந்துணையாக இருக்கிறது. பரிசுத்த நாயனான அவனை உரிய முறையில் புகழ்கிறேன்.

மேலும் வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வையன்றி வேறு யாருமில்லை. ஆட்சி அதிகாரங்கள் அவன் வசமே உள்ளன. அவனுக்கு யாதொரு இணையுமில்லை என்று நான் சாட்சி கூறுகிறேன். வல்ல இறைவனின் நேசராக திகழும் எங்கள் தலைவர், படைப்புகளில் மிகச் சிறந்த எங்கள் திருநபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் அடியாராகவும், தூதராகவும் இருக்கிறார்கள் என்று நான் சாட்சி கூறுகிறேன். அனைத்து நற்குணங்களையும் ஒருங்கே பெற்றிருந்தார்கள். மறுமை நாளில் இறைவனிடம் பரிந்துரை செய்யும் சிறப்பியல்புகளை பெற்றவர்கள்.

யா அல்லாஹ்! எங்கள் தலைவர் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அவர்களின் புனிதமிக்க குடும்பத்தினரின் மீதும், தியாகம் நிறைந்த தோழர்கள் அனைவர் மீதும், உலக முடிவு நாள் வரை அழகிய முறையில் அந்த தோழர்களை பின்பற்றி நடக்கும் முஸ்லிம்கள் மீதும் இறைவா நீ ஸலவாத்தும் ஸலாமும் பொழிந்திடுவாயாக!!!

கவனமாக கேளுங்கள்! இறைவனுக்கு அஞ்சி நடப்பதை எனக்கும் உங்களுக்கும் உபதேசிக்கிறேன். அவனுக்கே கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அவனுக்கு அஞ்ச வேண்டிய முறையில் அஞ்சி நடங்கள்.

வல்ல அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான்:(2:282)

وَاتَّقُوا اللَّهَ وَيُعَلِّمُكُمُ اللَّهُ وَاللَّهُ بِكُلِّ شَيْءٍ عَلِيمٌ

“அல்லாஹ்வுக்குப் பயந்து கொள்ளுங்கள். அல்லாஹ் உங்களுக்கு கற்றுக் கொடுக்கின்றான். மேலும், அல்லாஹ் அனைத்தையும் மிக அறிந்தவன்”

**முஸ்லிம்களே**! படிப்பறிவில்லாத ஒரு சமூகத்திற்கு அல்லாஹ் தன்னுடைய அடியார் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நபியாக அனுப்பிவைத்தான். அதுவரை அந்த சமூகத்திற்கு வாசிக்கவோ, எழுதவோ தெரிந்திருக்கவில்லை. ஆனால் மாபெரும் கல்வி புரட்சியை ஏற்படுத்தி இத்தகைய சமூகத்தை அறிவார்ந்த சமூகமாக இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மாற்றிக் காட்டினார்கள். அதற்கு பிறகு இந்த சமூகம் படிப்பறிவிலும், ஆராய்ச்சி அறிவிலும் பெரிய அளவில் தேர்ச்சி பெற்று விளங்குகிறார்கள்.

எல்லாம் வல்ல அல்லாஹ் தன்னுடைய வேதத்தில் கூறுகிறான்: (62:2)

هُوَ الَّذِي بَعَثَ فِي الْأُمِّيِّينَ رَسُولًا مِنْهُمْ يَتْلُو عَلَيْهِمْ آيَاتِهِ وَيُزَكِّيهِمْ وَيُعَلِّمُهُمُ الْكِتَابَ وَالْحِكْمَةَ وَإِنْ كَانُوا مِنْ قَبْلُ لَفِي ضَلَالٍ مُبِينٍ

“கல்வி அறிவில்லாத (அரபு) மக்களில் அவர்களில் உள்ள ஒருவரை அவன் (தன்னுடைய) தூதராக அனுப்பி வைத்தான். அவர்கள் இதற்கு முன்னர் பகிரங்கமான வழிகேட்டிலிருந்த போதிலும், அத்தூதர் அவர்களுக்கு அல்லாஹ்வுடைய வசனங்களை ஓதிக்காண்பித்து, அவர்களைப் பரிசுத்தமாக்கி வைத்து, அவர்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கற்றுக் கொடுக்கின்றார்”

“இதற்கு முன்னர் இந்த சமூக மக்கள் எழுத படிக்க தெரியாத பாமர மக்களாக இருந்தார்கள்” என்று மேல்கூறிய வசனத்திற்கு திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் விளக்கம் தருகிறார்கள். (تفسير الطبري : (372/23) ، والقائل هو قتادة رحمه الله)

இறைவனுடைய உதவியினால் இந்த பாமர மக்களுக்கு படிப்பறிவின் முக்கியத்துவம் விளங்கியது, கல்வி வளர்ச்சியின் அவசியத்தை இம்மக்கள் விளங்கினார்கள். கல்வியினால் கண்ணியமும், மேன்மையும் பெற்றார்கள். (التحرير والتنوير : (207/28))

ஏக இறைவன் அல்லாஹ் தஆலா தனது இறுதி வேதத்தை பின்வரும் தூய்மையான வசனத்தோடு தொடங்குகிறான்: (96:1)

اقْرَأْ بِاسْمِ رَبِّكَ الَّذِي خَلَقَ

“(நபியே! அனைத்தையும்) படைத்த உங்களது இறைவனின் திருப்பெயரால் (எனது கட்டளைகள் அடங்கிய திருக்குர்ஆனை) நீங்கள் ஓதுவீராக!”

அந்த வசனத்தை தொடர்ந்து, வாசிக்கும் பழக்கத்தை பின்வருமாறு உத்தரவிடுகிறான்: (96:3-4)

اقْرَأْ وَرَبُّكَ الْأَكْرَمُ* الَّذِي عَلَّمَ بِالْقَلَمِ

“(நபியே! பின்னும்) நீங்கள் ஓதுங்கள்! உங்களது இறைவன் மகாபெரும் கொடையாளி! அவன்தான் எழுதுகோலைக் கொண்டு (எழுதக்) கற்றுக் கொடுத்தான்”

படிப்பறிவில்லாத சமூகம் கல்வி வளர்ச்சியின் மூலம் மேம்படுவதற்கு இறைவனின் மேல்கூறிய கட்டளைகள் துணை புரிந்தன. எல்லாம் வல்ல ஏக இறைவன் படிப்பறிவு பெற்றவர்களை சமூகத்தில் மிகவும் உயர்ந்த நிலையில் வைத்திருக்கிறான். அதனை பின்வரும் வசனத்தில் நாம் விளங்கிக் கொள்ளமுடியும்: (58:11)

يَرْفَعِ اللَّهُ الَّذِينَ آمَنُوا مِنْكُمْ وَالَّذِينَ أُوتُوا الْعِلْمَ دَرَجَاتٍ وَاللَّهُ بِمَا تَعْمَلُونَ خَبِيرٌ

“உங்களிலுள்ள நம்பிக்கையாளர்களுக்கும், கல்வி ஞானம் உடையவர்களுக்கும் அல்லாஹ் பதவிகளை உயர்த்துவான். அல்லாஹ் நீங்கள் செய்பவைகளை நன்கறிவான்”

**தொழுகையாளிகளே**! தன்னுடைய சமுதாய மக்கள் படிப்பறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பெரிதும் ஆர்வம் கொண்டிருந்தார்கள். இதனால் முஸ்லிம்கள் அனைவரும் எழுத படிக்க கற்றுக் கொண்டார்கள். தன்னுடைய சமுதாய மக்கள் மிகவும் தேர்ச்சி பெற்றவர்களாக விளங்க வேண்டும் என்பதில் இறைதூதர் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அதிக கவனம் செலுத்தினார்கள்.

எனவேதான் இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சபையில் ஸஹாபா பெருமக்களில் எழுதபடிக்க தெரிந்தவர்கள் முன்னிலை பெற்றிருந்தார்கள். உதாரணமாக படிப்பறிவு பெற்றிருந்த ஜைத் இப்னு ஸாபித் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் மற்ற ஸஹாபாக்களை விட சபையில் முன்னிலை பெற்றிருந்தார்கள். கல்வியறிவின் அவசியத்தை மற்றவர்கள் உணர வேண்டும் என்பதற்காக வேறு பல முக்கியத்துவத்தையும் இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இந்த ஸஹாபிக்கு கொடுத்திருந்தார்கள். இந்த ஸஹாபிதான் இறைவனின் வஹி செய்தியை எழுதி வந்தார்கள். கடிதங்கள் எழுதும் பணியையும் இவர்களே செய்துவந்தார்கள். பல்வேறு மொழிகளை மொழிபெயர்ப்பு செய்து தரும் பணியையும் இவர்களே செய்தார்கள்.

இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நன்றாக எழுத படிக்க தெரிந்த ஸஹாபாக்களை பல்வேறு ஊர்களுக்கு அனுப்பி அந்த பகுதி மக்களுக்கு எழுத படிக்கவும், திருக்குர்ஆனை ஓதவும் கற்றுக் கொடுக்க சொன்னார்கள். இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

بَلِّغُوا عَنِّي وَلَوْ آيَةً

“என்னிடமிருந்து ஒரேயொரு (சிறு) செய்தி கிடைத்தாலும் சரி, அதைப் பிறருக்கு) எடுத்துரையுங்கள்”(3461 : البخاري )

முதியவர்களோ இளைஞர்களோ யாராயினும், குர்ஆனை நன்கறிந்தவர்களே உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் அவையினராகவும் ஆலோசகர்களாகவும் இருந்தனர்.( 4642 : البخاري)

ஸஹாபாக்கள் ரலியல்லாஹு அன்ஹும் அவர்கள் மிக அழகிய முறையில் எழுத படிக்க கற்றுக் கொண்டார்கள். திருக்குர்ஆனை மனனம் செய்வதில் ஒருவருக்கொருவர் முந்திக் கொண்டு செயல்பட்டார்கள். இவ்வாறுதான் படிப்பதின் அவசியம் மற்ற முஸ்லிம்களின் உள்ளங்களிலும், அரேபியர்களின் உள்ளங்களிலும் ஏற்பட்டது. தேவையான ஆராய்ச்சி அறிவை விரும்பி மேற்கொண்டார்கள். கலாச்சார வாழ்வியலின் நோக்கத்தையும், ஆழமான கல்வி வளர்ச்சியின் இலக்கையும் பெரிதும் விரும்பினார்கள்.

இதனால் பல மொழிகளில் பல நூல்களை தொகுத்து தந்தார்கள். பல மொழிபெயர்ப்பு நூல்கள், ஆய்வு நூல்கள், ஆராய்ச்சி தொகுப்புகள் என அனைத்து துறையிலும் இந்த மனித குலத்திற்கு தேவையான அறிய நூல்களை எழுதி வைத்துள்ளனர். அதிக எண்ணிக்கையில் நூல்கள் வெளியாகின, இதனால் நூலகங்களும், கல்வி நிலையங்களும் இஸ்லாமிய நாகரீகத்தின் ஒரு

முக்கிய அடையாளம் என்கிற பார்வை மற்றவர்களிடம் ஏற்பட்டது. இஸ்லாமிய பொருளாதாரம் நூலகங்களுக்காக பெருமளவு பங்காற்றியது.

உதாரணமாக ஒளிமயமான மதீனாவில் உள்ள நூலகங்கள், சங்கை நிறைந்த மக்காவிலும், பைத்துல் முகத்தஸிலும் நூலகங்கள் உள்ளன. எகிப்தின் கெய்ரோ, பக்தாத், தமஸ்கஸ், கொர்டோபா(Cordoba, a Spain City), செவில்லெ(Seville, a Spain City) கிரானடா(Granada, a Spain City) போன்ற நகரங்களில் அமைந்துள்ள பழங்கால நூலகங்கள் இஸ்லாமிய கலாச்சாரத்திற்கு மிகப்பெரிய எடுத்துக்காட்டாகும். படிப்பறிவை பெறுவதற்கு அக்காலத்தில் இருந்த இஸ்லாமியர்களும், அரேபியர்களும் கொடுத்த முக்கியத்துவத்தை இதன் மூலம் புரிந்தகொள்ள முடியும்.

**முஃமீன்களே**! நூல்களை வாசிப்பதால் எண்ணற்ற பல நன்மைகள் கிடைக்கும். ஏராளமான பலன்கள் கிடைக்கும். இறைவன் கண்ணியப்படுத்தியுள்ள கல்வி வளர்ச்சியை பெற முடியும். ஒரு சமூகத்திற்கு உயரிய வாழ்வியலை பெற்றுத்தரும். வாசிப்பதின் மூலம் அறிவு வளர்ச்சி மேம்படுகிறது, பார்வைகள் ஆழமாகவும் அழுத்தமாகவும் அமையும், எண்ணற்ற பல உண்மைகளை புரிந்து கொள்ள முடியும், சிந்தனைகள் எழுச்சிபெறும், ஒரு சிறந்த பண்பாடு கட்டமைக்கப்படும், நாகரீக வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும்.

மனிதநேய விழிப்புணர்வுகள் ஏற்படுவதற்கு வழிவகுக்கும், மனிதகுலத்திற்கு தேவையான முன்னேற்றத்தை பெற்றுத்தரும். அர்த்தமுள்ள அறிவியியல் வளர்ச்சிக்கு துணை புரியும், சமூக சமநிலையில் கலாச்சாரம் முன்னேறிச் செல்லும், தொடர்ந்து நல்ல புத்தகங்களை வாசிப்பதின் மூலம் வளர்ச்சியில் முன்னிலை வகிக்க முடியும், சமூக ஏற்றத்தாழ்வுகளை களைந்து சீரான வளர்ச்சியை நோக்கி செல்ல முடியும், தேவையான மற்றும் பலனுள்ள நூல்களை வாசிப்பதின் மூலம் பல்வேறு துறைகளில் முன்னேறிச் செல்ல முடியும், அந்த துறைகளின் தேவைகளை உணர்ந்து அதற்கான ஆராய்ச்சி பணிகளில் ஈடுபட வேண்டும் என்கிற எண்ணம் மேலோங்கும்,

இதனடிப்படையில்தான் ஒவ்வொரு எழுத்தாளனும், மொழிபெயர்ப்பாளரும், தொகுப்பாளரும் சிறந்த நூல்களை எழுதிவைத்துள்ளனர். அந்த நூல்களை வாசிக்கும்போதுதான் சமூக வளர்ச்சியில் அவர்கள் கொண்டுள்ள அக்கறையை நாம் விளங்க முடியும். அடுத்த தலைமுறையின் சிந்தனைகளை பண்படுத்தும் நோக்கில் அவர்கள் கடுமையாக உழைத்து அந்த நூல்களை எழுதி வைத்துள்ளனர்.

**அல்லாஹ்வின் அடியார்களே**! புத்தகங்களை வாசிக்க வேண்டும் என்று நாம் பிள்ளைகளுக்கு அறிவுறுத்திக் கொண்டே இருக்க வேண்டும். வளரும் பருவத்திலேயே வாசிக்கும் பழக்கத்தை அவர்கள் பெற்றுவிட வேண்டும். தேவையான அறிவு வளர்ச்சியை சுயமாக பெறுவதற்கு இந்த பழக்கம் பெரிதும் துணை புரியும். வாசிக்க வேண்டியதில் மிகவும் முக்கியமான நூல் இறைவனின் திருமறைக் குர்ஆன் ஆகும். மிகவும் பயபக்தியோடு, கண்ணியமான முறையில் திருக்குர்ஆனை ஓத வேண்டும். அதன் அர்த்தங்களையும், விளக்கங்களையும் மிக கவனமாக வாசிக்க வேண்டும். ஒரு மனிதனின் ஆளுமைத்திறனை வளர்ப்பதில் திருமறைக் குர்ஆன் பெருமளவில் உதவுகிறது. இந்த புனித வேதத்தை

வாசிப்பவருக்கு இறைவன் நன்மைகளை பன்மடங்காக அதிகப்படுத்தி தருகிறான். நிலையான கூலியையும் ஏராளமான நன்மைகளையும் இறைவன் தருகிறான்.

இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

مَنْ قَرَأَ حَرْفًا مِنْ كِتَابِ اللَّهِ فَلَهُ بِهِ حَسَنَةٌ, وَالْحَسَنَةُ بِعَشْرِ أَمْثَالِهَا، لَا أَقُولُ ألم حَرْفٌ, وَلَكِنْ أَلِفٌ حَرْفٌ, وَلَامٌ حَرْفٌ, وَمِيمٌ حَرْفٌ

“அல்லாஹ்வுடைய வேதத்தில் இருந்து ஒரே ஒரு எழுத்தை யார் ஓதுகிறாரோ அவருக்கு (அதற்குரிய) நன்மை கிடைக்கும். அந்த நன்மை என்பது (அவருக்கு) அதனைப் போன்று பத்து மடங்காக கிடைக்கும். ‘அலீப் லாம் மீம்’ என்பதை ஒரே எழுத்து என்று நான் சொல்லமாட்டேன். ஆனால் ‘அலீப்’ என்பது ஒரு எழுத்து, ‘லாம்’ என்பது ஒரு எழுத்து, ‘மீம்’ என்பது ஒரு எழுத்து (என்று சொல்வேன்)” (الترمذي : 2910)

நாம் நம்முடைய பிள்ளைகளோடு அமர்ந்து புத்தகங்களை வாசிக்கும் பழக்கத்தை கற்றுக் கொடுக்க வேண்டும். இப்படி செய்வதால் வாசிப்பது அவர்களின் ஓர் அன்றாட பழக்கமாக மாறிவிடும். தொடர்ந்து அவர்கள் வாசிப்பதற்கு நாம் தூண்டுகோலாக இருக்க வேண்டும். புத்தகங்களை வாசிக்கும்போது அவர்களுக்கு புரியாதவற்றை மிகவும் பொறுமையாக நாம் விளக்கி கூற வேண்டும். புரியாத வார்த்தைகளுக்கு பொருள் தேடும் பழக்கத்தையும், தேவையான தகவல்களை உரிய ஆதரங்களுடன் மூல நூல்களில் தேடும் பழக்கத்தையும் நம்முடைய பிள்ளைகளுக்கு நாம் கற்றுக் கொடுக்க வேண்டும்.

மிக குறிப்பாக அன்றாட நாட்டு நடப்பையும், உலக நடப்பையும் தெரிந்து கொள்ளும் ஆர்வத்தையும் நாம் அவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும். இதனால் பெரும் நன்மைகள் விளையும். நூல்களை வாசிப்பதின் மூலம் பெற்ற அறிவை தினசரி நடப்புகளோடு ஒப்பீடு செய்து பார்க்கும் நல்ல பழக்கம் ஏற்படும். இதனால் எளிதில் மறந்து போகாமல் அந்த தகவல்களை என்றும் நினைவில் வைத்துக் கொள்ள முடியும். அதுமட்டுமல்ல தனக்கு தேவையான நூல்கள் எவை என்கிற தேடலும் உருவாகும். மிகச் துல்லியமான ஆதாரப்பூர்வமான தகவல்களை தெரிந்து வைத்திருப்பதில் அதிக ஆர்வம் ஏற்படும்.

தொடர்ந்து வாசிப்பவர்களால் நடுநிலையான நூல்களை எளிதில் அடையாளம் காண முடியும். அவர்களால் அறிவுப்பசி என்றால் என்ன என்பதும், அதன் வீரியம் எத்தகையது என்பதையும் புரிந்துகொள்ள முடியும். ஒரு கவிஞர் கூறுகிறார்:

وَخَيْرُ جَلِيسٍ فِي الزَّمَانِ كِتَابُ

“எக்காலத்திலும் உடன் இருப்பதற்கு சிறந்த தோழமை நூல்களாகும்”

சிறந்த முறையில் வாசிப்பு பழக்கத்தை வளர்ப்பதற்கு வலுவான காரணிகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். பல்வேறு வகையான நூல்களை உள்ளடக்கிய ஒரு சிறிய நூலகத்தை நமது வீட்டிலேயே நாம் உருவாக்க வேண்டும். அதில் குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் தேவையான நூல்கள் இடம்பெற வேண்டும். வீட்டில் உள்ள அனைவரும் ஒன்று கூடும்

வகையில் அந்த இடம் அமைந்திருக்க வேண்டும். தேவையான தலைப்புகளில் பல்வேறு துறையைச் சார்ந்த நூல்கள் இடம்பெற வேண்டும். இதனால் குடும்ப உறுப்பினர்களின் அறிவுத்திறன் மேம்படும். அவர்களின் பண்பாடு அழகிய முறையில் அமையும். இதன் மூலம் சமூகத்தில் உள்ள ஒவ்வொரு தனி மனிதனும் வாசிக்கும் பழக்கத்தை பெற முடியும்.

**தொழுகையாளிகளே**! அதிகமாக வாசிக்கும் பழக்கத்தினால் சுயமாக நூல்கள் எழுதும் ஆற்றல் வளரும், சிறந்த தொகுப்புகளை வெளியிட முடியம், தகவல் களஞ்சியங்களை தொகுக்கும் திறமையை பெற முடியும். வாசிப்பின் மூலம் அதிகமான தகவல்களை பெறலாம், அதன் மூலம் அறிவின் வளர்ச்சியில் முதிர்ச்சி நிலையை அடைந்து கொள்ளலாம், தொடர்ந்து வாசிப்பவரின் மனநிலை அழகிய பக்குவத்தை பெற்றுவிடும்.

அதனை தொடர்ந்து மேம்பட்ட தனது சிந்தனைத்திறனை பயன்படுத்தி தான் வாசித்தவைகளையும் ஆதராமாக கொண்டு புதிய புதிய நூல்களை எழுதலாம். விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஆக்கப்பூர்வமான கட்டுரைகளையும் எழுத முடியும். அதனை படிப்பவர்களுக்கு பலனுள்ள வகையில் இருக்கும். எதிர்கால தலைமுறைக்கு சிறந்த முன்னோடியாக அமையும். இதனால் மற்றவர்களின் தொலைநோக்கு பார்வை வீரியமடையும். சிந்தனை கதவுகள் தட்டப்படும். ஒரு சமூக முன்னேற்றத்திற்கு பெரிய அளவில் உறுதுணையாக இருக்கும்.

யா அல்லாஹ் எங்களுக்கு தேவையானவற்றை நீ கற்றுக் கொடுப்பாயாக! நாங்கள் கற்றுக் கொண்டவைகளின் மூலம் எங்களுக்கு பலன் தருவாயாக!!! எங்கள் எண்ணங்களையும் சிந்தனைகளையும் அழகானதாக ஆக்கி வைப்பாயாக!! அறிவு வளர்ச்சியின் மூலமும், நிதானத்தின் மூலமும் எங்களை நீ அழகாக ஆக்கி வைப்பாயாக

**தொழுகையாளிகளே**! ஏக இறைவன் அல்லாஹ்விற்கு அஞ்சி நடப்பதே நாம் மறுமை நாளுக்கு தயார் செய்யும் சிறந்த ஏற்பாடாகும். இவ்வுலக வாழ்வை சிறந்த முறையில் கட்டமைத்துக் கொள்வதற்கும், மறுமை வாழ்வில் நிரந்தர வெற்றியை பெறுவதற்கும் வாசிக்கும் பழக்கம் மிக மிக அவசியமாகும்.

இதனால்தான் நீதமான நமது அரசு வாசிப்பதற்கு அதிக முக்கியத்துவம் தருகிறது. பல நூல்களை ஏற்பாடு செய்து கொடுக்கிறது. வகுப்பறையின் அன்றாட பாடத்திட்டங்களுக்கு இடையில் வாசிப்பதற்கென்று தனி முக்கியத்துவத்தை இந்த அரசு முனைப்புடன் செயல்படுத்துகிறது. இதற்கென பல போட்டிகளை அறிவித்து, அவற்றில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கி உற்சாக படுத்துகிறது.

நமது தேசத்தின் மாண்புமிகு ஜனாதிபதி ஷைக் கலீபா இப்னு ஜாயித் (அல்லாஹ் அவர்களை பாதுகாப்பானாக) அவர்கள் 2016 ம் வருடத்தை "வாசிப்பதற்கான ஆண்டு" (**2016 Year of Reading**) என்று அறிவிக்கிறார்கள். எனவே இந்த ஆண்டில் அதிகமான நேரங்களை ஒதுக்கி பல நூல்களை வாசிக்க வேண்டும். கிடைக்கும் குறைவான நேரங்களையும் அதற்காகவே ஒதுக்க வேண்டும், எனவே மருத்துவமனைகளில் காத்திருக்கும் நேரம், நோயாளிகளை நலம் விசாரிப்பதற்காக மருத்துவ காத்திருப்பு அறையில் காத்திருக்கும் நேரம், பொது வாகனங்களில்/விமானங்களில் பயணிக்கும் நேரம், பொது இடத்தில் யாருக்கேனும்

காத்திருக்கும் நேரம் என அனைத்து நேரங்களையும் பயனுள்ள வகையில் வாசிப்பதில் கழிக்க வேண்டும்.

நம் தேசத்தின் பிரதமர், துணை ஜனாதிபதி மாண்புமிகு ஷைக் முஹம்மது இப்னு ராஷித் ஆலி மக்தூம் (அல்லாஹ் அவர்களை பாதுகாப்பானாக) அவர்கள், இந்த வருடத்தை வாசிப்பதற்கான ஆண்டாக ஏற்படுத்தி சிறந்த சிந்தனை வளர்ச்சியை நோக்கி நம் அனைவரையும் அழைக்கிறார்கள். பொதுவாக அதிகமான புத்தகங்களை வாசிக்கும்போது சிந்தனை திறன் எழுச்சி பெறுகிறது, அனைவரும் கூட்டாக ஒரு செயலில் இறங்கும் போது, விலகி இருக்கும் ஒவ்வொரு தனி மனிதனுக்கும் அந்த செயலை செய்ய வேண்டும் என்கிற ஆர்வம் வரும். ஒவ்வொரு மனிதனும் தனது அன்றாட வாழ்நாளில் ஒரு சிறுபகுதியேனும் புத்தகங்களை வாசிப்பதற்கென்று ஒதுக்க முன்வர வேண்டும்.

“உலமாக்களும், ஆராய்ச்சியாளர்களும், புதுமையான கண்டுபிடிப்பாளர்களும் நமது எதிர்கால வாழ்வை வழிகாட்டி சொல்கிறார்கள். எனவே அவர்களின் ஆக்கங்களை வாசிப்பதின் மூலம் நாம் அவற்றை அறிந்து கொள்வது மிக அவசியமாகும். பல அறிய தகவல்களையும், வெளிவராத பல உண்மைகளையும் வாசிப்பதின் மூலம் தெரிந்து கொள்ள முடியும். அன்றாடம் வாசிப்பவனை சிறந்த படைப்பாளியாக உருவாக்குகிறது. அறிவார்ந்த மற்றும் சிந்தனை வளர்ச்சி பெற்ற சமூகமாக அமீரக தேசத்தை கட்டமைப்பதற்கு இந்த வாசிப்பு துணை புரியும்” என்று மாண்புமிகு பிரதமர் கூறுகிறார்கள்

யா அல்லாஹ்! உனக்கும், உனது தூதர் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹீ வஸல்லம் அவர்களுக்கும், நீ யாரையெல்லாம் பின்பற்றி நடக்க சொன்னாயோ அவர்களுக்கும் நாங்கள் முழுமையாக வழிபடுவதற்கு எங்கள் அனைவருக்கும் உதவி புரிவாயாக!!

அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான் : (4:59)

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا أَطِيعُوا اللَّهَ وَأَطِيعُوا الرَّسُولَ وَأُوْلِي الأَمْرِ مِنكُم

“ஈமான்கொண்ட நல்லடியார்களே ! அல்லாஹ்வுக்கு கீழ்படியுங்கள்; இன்னும் (அல்லாஹ்வின்) தூதருக்கும், உங்களில் (நேர்மையாக) அதிகாரம் வகிப்பவர்களுக்கும் கீழ்படியுங்கள்”

யார் மீது ஸலவாத் சொல்ல வேண்டும் என்று நமக்கு கட்டளை இடப்படிருக்கிறதோ அவர்கள் மீது நம் அனைவரும் ஸலவாத் ஓதிக் கொண்டே இருப்போம்:

مَنْ صَلَّى عَلَيَّ صَلاَةً صَلَّى اللَّهُ عَلَيْهِ بِهَا عَشْراً

இறைதூதர் ஸல்லல்லாஹுஅலைஹீ வஸல்லம் அவர்கள் கூறினார்கள் "யார் என் மீது ஒரு முறை ஸலவாத் சொல்லுகிறார்களோ அவர் மீது அல்லாஹ் பத்து முறை ஸலவாத் சொல்லுகிறான்" (முஸ்லிம் : 384 )

"யா அல்லாஹ் ! எங்கள் தலைவரும், எங்கள் நபியுமாகிய முஹம்மதுநபி ஸல்லல்லாஹுஅலைஹீ வஸல்லம் அவர்கள் மீதும், புனிதமிக்க அவர்களின் குடும்பத்தினரின் மீதும், தியாகம் நிறைந்த அவர்களின் தோழர்கள் மீதும் ஸலவாத் என்னும் ஈடேற்றத்தையும்

ஸலாம் என்னும் அமைதியையும், பரகத் என்னும் நற்பாக்கியங்களையும் தந்தருள்வாயாக!, மேலும் நல்வழி காட்டும் கலிபாக்களாகிய அபூபக்ர், உமர், உஸ்மான், அலி ரலியல்லாஹூ அன்ஹூம் ஆகியோர்களையும், சங்கை நிறைந்த அனைத்து தோழர்களையும், அவர்களை தொடர்ந்து வந்த தாபியீன்களையும், உலக முடிவு நாள் வரை இவர்களை அழகிய முறையில் பின்பற்றி நடக்கும் முஸ்லிம்களாகிய எங்கள் அனைவரையும் நீ பொருந்திக்கொள்வாயாக.!!!

யா அல்லாஹ் போர்களில் உயிர்த்தியாகம் செய்த நம் தேசத்தின் இராணுவ வீரர்களுக்கு நீ கருணை காட்டுவாயாக! அவர்களுக்கு ஈடேற்றமான தங்குமிடத்தை வழங்குவாயாக, கண்ணியம் நிறைந்தவனே, மன்னிக்ககூடியவனே அந்த வீரர்களின் மதிப்பை நீ உயர்திடுவாயாக, நபிமார்கள் மற்றும் ஸித்தீகீன்களோடு அவர்களை வைப்பாயாக!!

வீரர்களின் தாய்மார்களுக்கும், தந்தைமார்களுக்கும், மனைவிமார்களுக்கும், குடும்ப உறுப்பினர்களுக்கும் நீ அதிகமான நன்மைகளை வழங்கிடுவாயாக, யா அல்லாஹ் அரேபிய கூட்டுப்படைக்கு நீ வலுவான ஆற்றலை வழங்கிடுவாயாக! அவர்களுக்கு உறுதுணையாக இருப்பாயாக!! யா அல்லாஹ்! ஏமன் தேசத்து மக்களுக்கு நீ உதவி புரிவாயாக! அவர்கள் அனைவரையும் ஒரே ஷரீஅத்தின் கீழ், உண்மையின் ஒரே வார்த்தையின் கீழ் ஒன்று சேர்ப்பாயாக!! அவர்களுக்கு எண்ணற்ற வகையில் நீ கருணை காட்டுவாயாக!!! சங்கையானவர்களுக்கெல்லாம் சங்கையானவனே அவர்களுக்கு மிக அமைதியான நிலையான ஆட்சியை வழங்கிடுவாயாக!!!

**யா அல்லாஹ்! மறைவாகவும் பகிரங்கமாகவும் நடக்கும் குழப்பத்திலிருந்து இந்த அமீரக தேசத்தை பாதுகாப்பாயாக!! அனைத்து இஸ்லாமிய தேசங்களிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக!!! (இந்த துஆவை இமாம் இரண்டு முறை ஓத வேண்டும்)**

யா அல்லாஹ்! எங்கள் நோன்பையும், தொழுகையையும் ஏற்றுக் கொள்வாயாக!! நாங்கள் உன்னிடம் சொர்க்கத்தை கேட்கிறோம், சொல்லாலும் செயலாலும் அந்த சொர்க்கத்தின் பக்கம் நெருங்கும் பாக்கியத்தை உன்னிடம் கேட்கிறோம்!!! நரகிலிருந்து பாதுகாப்பு கேட்கிறோம்!

யா அல்லாஹ்! நாங்கள் நற்காரியங்கள் புரிவதற்கு உதவி செய்வாயாக!! கீழ்த்தரமான செயல்களை நாங்கள் விடுவதற்கும் எங்களுக்கு அருள் புரிவாயாக!!! இறைநம்பிக்கையை எங்களுக்கு பிரியம் உள்ளதாக ஆக்கிவைப்பாயாக!!! மேலும் அதனை எங்கள் உள்ளங்களில் அலங்காரமாக வைப்பாயாக!!! இறைவனுக்கு நன்றி மறப்பதையும், பாவங்கள் செய்வதையும், தவறுகள் செய்வதையும் எங்களுக்கு வெறுப்பிற்குரியதாக்கி வைப்பாயாக!! எங்கள் இறைவா! நாங்கள் உன்னிடம் நேர்வழியையும், இறையச்சத்தையும், கற்பையும், போதுமென்ற மனதையும் கேட்கிறோம்.

யா அல்லாஹ்! எங்களுக்கு உண்மையை உண்மையாகவே காட்டுவாயாக! அதனை பின்பற்றும் பாக்கியத்தையும் தருவாயாக!!! தீமையை தீமையாக காட்டுவாயாக! அதனை விட்டு நாங்கள் தவிர்ந்து விடுவதற்கும் நீ உதவி புரிவாயாக!!! எங்கள் மனைவி மக்களுக்கு நீ பரக்கத்து செய்வாயாக!!! யா அல்லாஹ்! நிச்சயமாக நாங்கள் உன்னிடம் பலன்தரக்கூடிய கல்வியை கேட்கிறோம், மேலும் அஞ்சி நடக்கும் உள்ளத்தையும், எப்போது திக்ர் செய்யும் நாவையும்,

விசாலமான உயர்தரமான ரிஸ்கையும், ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய நல் அமல்களையும், உடலில் ஆரோக்கியத்தையும், ஆயுட்காலத்திலும் குழந்தை செல்வத்திலும் பரக்கத்தையும், நாங்கள் உன்னிடம் மன்றாடி கேட்கிறோம்.

யா அல்லாஹ்! எங்களுக்கு பலன் தரக்கூடியவற்றை எங்களுக்கு கற்றுத் தருவாயாக, நீ கற்று தந்ததை எங்களுக்கு பலனுள்ளதாக ஆக்கி வைப்பாயாக, எங்களுக்கு அறிவு ஞானத்தை அதிகப் படுத்துவாயாக! யா அல்லாஹ்! எங்கள் உள்ளங்களுக்கு இறை அச்சத்தை தருவாயாக, மேலும் அதை நீ தூய்மைப் படுத்துவாயாக நீயே அதனை தூய்மைப் படுத்துவதில் சிறந்தவனாக இருக்கிறாய்! யா அல்லாஹ்! நீயே அதற்கு பொறுப்பாளனாகவும், எஜமானனாகவும் இருக்கிறாய், எங்கள் அனைத்து காரியங்களின் இறுதி முடிவை அழகாக்கி வைப்பாயாக!

யா அல்லாஹ்! எங்கள் எண்ணங்களை சீர்படுத்துவாயாக, எங்கள் மனைவிமார்களிலும், சந்ததியிலும் நீ எங்களுக்கு பரக்கத்து செய்வாயாக, மேலும் அவர்களை எங்களுக்கு கண் குளிர்ச்சியாக ஆக்குவாயாக! எங்கள் நண்பர்களுக்கு உதவி புரிவாயாக! எங்கள் அந்தஸ்துகளை உயர்த்தி விடுவாயாக, எங்கள் நன்மைகளை அதிகப் படுத்துவாயாக, எங்கள் பாவங்களை எங்களை விட்டும் அகற்றிடுவாயாக! (முடிவில்) நல்லோர்களுடன் எங்களை மரணிக்கும்படிச் செய்வாயாக!

யா அல்லாஹ்! எங்கள் அனைத்து பாவத்தையும் மன்னித்துவிடுவாயாக, எங்கள் அனைத்து கவலைகளையும் போக்கி விடுவாயாக, கடன்களை நிவர்த்தி செய்துவிடுவாயாக, நோயாளிகளை குணப்படுத்திவிடுவாயாக, தேவைகளை மேன்மையாக்கி விடுவாயாக மேலும் நிறைவேற்றி விடுவாயாக. அகிலத்தார் யாவரையும் படைத்து வளர்த்து பக்குவப்படுத்தும் நாயனே! எங்கள் இறைவனே! எங்களுக்கு நீ இம்மையிலும் நன்மை அளிப்பாயாக! மறுமையிலும் நன்மையளிப்பாயாக! (நரக) நெருப்பின் வேதனையிலிருந்தும் எங்களை நீ பாதுகாப்பாயாக!

யா அல்லாஹ்! அமீரக தேசத்தின் எங்கள் தலைவர், எங்கள் காரியங்களின் மன்னர் ஷைகு கலீபாவையும் மற்றும் அவரது பிரதிநிதியையும், நீ நேசித்தவாறு பொருந்திக்கொண்டவாறு உதவி புரிவாயாக! மேலும் அவரது சகோதரர்களை அமீரகத்தின் நடுவர்களாக நிலைப்படுத்துவாயாக !! உயிரோடு உள்ள மற்றும் மரணித்த முஸ்லிமான ஆண் பெண் அனைவருக்கும் நீ மன்னிப்பை வழங்கிடுவாயாக!!!

யா அல்லாஹ்! ஷைகுஜாயிது, ஷைகு மக்தூம், உனது கிருபையில் வந்தடைந்த அமீரகத்தின் மன்னர்களாகிய இவர்களது சகோதரர்கள், ஆகிய அனைவருக்கும் உனது கிருபையை பொழிவாயாக!!!

யா அல்லாஹ்! இந்த பள்ளிவாசலை கட்டியவருக்கும், அவருடைய பெற்றோர்களுக்கும், இந்த பள்ளியில் நல்வணக்கம் புரியும் அனைவருக்கும் நீ மன்னிப்பையும், நற்கூலியையும் வழங்குவாயாக! அல்லாஹ்வுடைய பெயர் சொல்லப்படுவதற்காக பள்ளிவாசல் கட்டும் அனைவருக்கும் யா அல்லாஹ் நீ உனது மன்னிப்பை வழங்குவாயாக! யா அல்லாஹ் எங்களுடைய சமூகத்தை அருள்நிறைந்த சமூகமாக ஆக்கி வைப்பாயாக! பாவகாரியங்களை

செய்யாமல் எங்கள் சமூகத்தை நீ பாதுகாத்து விடுவாயாக! துற்பாக்கியவனாகவோ, நன்மையான காரியங்களை செய்யாதவனாகவோ எங்களில் யாரையும் நீ ஆக்கி விடாதே!!

யா அல்லாஹ் ! இந்த அமீரகத்திலும் அனைத்து இஸ்லாமிய நாடுகளிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக !!

மகத்தான அல்லாஹ்வை நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவு கூறுகிறான், மேலும் அவன் நமக்கு செய்த நிஃமத்களுக்காக அவனுக்கு நன்றி செலுத்துங்கள், அவன் அதனை உங்களுக்கு மேலும் அதிகப்படுத்துவான். தொழுகையை நிலைநாட்டுங்கள். ஏனென்றால், நிச்சயமாகத் தொழுகை மானக்கேடான காரியங்களிலிருந்தும். பாவங்களிலிருந்தும் (மனிதனை) விலக்கிவிடும். அல்லாஹ்வை (மறக்காது நினைவில் வைத்து, அவனை) திக்ரு செய்து வருவது மிகமிகப் பெரிய காரியம். நீங்கள் செய்பவைகளை அல்லாஹ் நன்கறிவான். (ஆதலால், இவைகளுக்குரிய கூலியை நீங்கள் அடைந்தே தீருவீர்கள்).